**O.S.173 of 2021**

Date : 12.11.2025

வா.சா.1 : ராஜி

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்</u>

பட்டா எண்.672 ன் அசல் பட்டா பாஸ் புக் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் கொடுத்துள்ள ஆவணங்களை எடுத்துப்பார்த்து மேற்படி பட்டாவை காண்பிக்கமுடியுமா என்றால் உள்ளே கொடுத்துள்ளேன். மேற்படி பட்டாவை பார்த்தால்தான் சர்வே எண். விஸ்தீரணத்தை சொல்லமுடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.9 மற்றும் 10 ஆவணங்களை காட்டி அது குறித்து சொல்லமுடியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. வழக்கு சொத்து காலிமனை என்றால் முதலில் வீடாக இருந்தது. தற்போது காலி மனையாக உள்ளது. மேற்படி காலிமனை மூக்கன் என்பவரின் தொட்டு அடுத்த வடபுறம் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சர்வே எண்.1266/35 ற்கான பட்டாவில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் எனக்கு சரியாக நியாபகமில்லை. வழக்கு சொத்திற்கும் மேற்படி சர்வே எண்.1266/35 ல் அமைந்துள்ள வீட்டின் இடையே 1 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்காது பக்கத்தில் அமைந்துள்ளது. ஆனால் தொட்டு அடுத்து அமையவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் என்னுடைய பொருட்கள் அனைத்தையும் பிரதிவாதி கடந்த 2012 ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் பிரதிவாதிகள் தூக்கி எறிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்மந்தமாக போலிசில் புகார் எதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தேதியிலேயே கொடுக்கப்பட்டது. அந்த போலிஸ் புகாரிரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் நான் கொடுத்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காவல் துறை புகாரின் தேதி 28.12.2015 என்றால் சரிதான். நான் சொல்கின்ற சம்பவம் நடந்து 2 மாதங்கள் கழித்து கொடுத்துள்ளேன் என்றால் உடனே கொடுத்தேன். செப்டம்பர் 2015 ல் எந்த வித காவல் துறை புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கொடுத்துள்ள நிரூபண வாக்குமூலத்தில்

உள்ள சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் பற்றி எந்த சங்கதிகளும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நத்தம் பட்டா எண்.1266/35 ல் கண்ட சொத்து மட்டும் தான் எங்கள் குடும்ப அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த காலத்திலும் வீடு அமைந்ததில்லை என்றும் அது எப்போதுமே காலி மனையாகத்தான் இருந்தது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்தது என்றும் என் குடும்ப அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-9, வா.சா.ஆ.10 ஆவணங்களை வைத்து தாவா சொத்தை அடையாளப்படுத்த முடியாது என்றால் சரியல்ல. அழிந்து போன வீட்டிற்கு தீர்வை ரசீது போட்டுள்ளதாகவும், அது தண்ணீரில் போய்விட்டதாகவும் சொல்லியுள்ள சாட்சியம் வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வா.சா.ஆ-5 காவல் துறை புகாரையும், அதன் தொடர்ச்சியான குற்றவியல் நடவடிக்கைகளையும், இந்த வழக்கையும் நான் மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கேட்டுள்ள எந்த பரிகாரமும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.